

# நாவலர் பாலர் பாடசாலை

ஈஞ்சடி - சுதுமலை



# கலை விழா 2009

## தலைவர் அறிக்கை

**திரு. சி. சந்திரராசா அவர்கள்**

(இளைப்பாறிய பிரதி அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் அறிக்கை

சுதுமலை ஈஞ்சடி வைரவப் பெருமானின் பாதங்களைப் பணிந்து மகிழ்ச்சிகரமான இந்த மாலைப் பொழுதில் எங்கள் பாடசாலையின் கலை விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் பிரதம விருந்தினர் திருமதி. பு. சிவலிங்கம் (செயலாளர் பிரதேச சபை மானிப்பாய்) அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள திருமதி பி. அம்பிகைபாலன் (ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்) அவர்களே, திரு. இ. லோகநாதன் (கிராம அலுவலர் சுதுமலை வடக்கு) அவர்களே, திரு. சி. பாலசுப்பிரமணியம் (கிராம அலுவலர் உடுவில் தெற்கு) அவர்களே, கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் திரு. கா. திருநாவுக்கரசு (தலைவர் ஈஞ்சடி ஞான வைரவர் திருக்கோவில்) அவர்களே, திரு. க. லிங்கேஸ்வரன் (தலைவர் நாவலர் சன சமூக நிலையம்) அவர்களே, இங்கு வருகை தந்திருக்கும் எமது முன்னாள் சபை உறுப்பினர்களே அயற்பாடசாலை ஆசிரியர்களே எமது கிராமத்து மக்களே எமது ஆசிரியர்களே எமது நிர்வாக சபை உறுப்பினர்களே குழந்தைகளே அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

இன்றைய தினம் எமது பாடசாலையின் முக்கியமான ஒரு தினமாகும். இன்றைய தினம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுள்ள எங்கள் பிரதேச சபைச் செயலர் திருமதி பு. சிவலிங்கம் அவர்கள் எமது பாடசாலையின் மீது நிறைந்த ஈடுபாடு கொண்டவர். அதன் வளர்ச்சியை நேசிக்கும் அவரது எண்ணத்துக்கு இணையாக நம் மாணவர்களின் துலங்கல்களும் ஓங்கி வருகின்றது. அவர் எமது பாடசாலையைப் பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்து அதனைப் பதிவு செய்து இன்று பேரொளியாகத் திகழ வைத்துள்ளார். அவர் இவ்விழாவில் கலந்து கொள்வது எம்மைப் பெருமை கொள்ளச் செய்கிறது. அவர்களை அன்புடன் வரவேற்று மனம் மிக மகிழ்வடைகிறேன்.

எங்கள் கிராமத்தில் பிறந்து எமது பிரதேச கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரியும் திருமதி. சி. அம்பிகைபாலன் அவர்களே! இன்றைய நாளில் தாங்கள் எங்கள் பாடசாலைக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவை மெருகூட்டுவதற்கு நாங்கள் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். தங்களது தந்தையார் திரு. ச. தம்பித்துரை (இளைப்பறிய வங்கி முகாமையாளர்) எமது சபையின் பொருளாளராகக் கடமையாற்றி நிறைந்த பணியாற்றினார். அவரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைத்து தங்களையும் வரவேற்கின்றேன்.

எங்கள் கிராம அலுவலர் திரு. லோகநாதன் அவர்களே இன்றைய இந்த இனிய நாளில் தாங்கள் எங்கள் பாடசாலைக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்தமையையிட்டு மகிழ்கிறோம் எமது பாடசாலையின் தேவை அறிந்து அவ்வப்போது தங்கள் உதவிகளைத் தாராளமாக மனநிறைவோடு செய்து தருவதை எண்ணி நன்றி மனதுடன் உங்களை வரவேற்கின்றேன்.

உடுவில் தெற்கு கிராம அலுவலர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்களே, தாங்கள் இன்று இவ் விழாவில் வருகை தந்ததையிட்டு மகிழ்கின்றோம். தாங்கள் வழங்கும் உற்சாகமும் ஊக்கமும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்தது. தங்களையும் வரவேற்கின்றேன்.

இன்றைய இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் திரு. கா. திருநாவுக்கரசு (தலைவர் ஈஞ்சடி ஞானவைரவர் திருக்கோவில்) அவர்களே தங்களது நிர்வாகத் திறமையாலும் ஆற்றலாலும் ஆலயத்தை திறம்பட நடாத்துவதுடன் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருப்பதையிட்டு மகிழ்ந்து வரவேற்கிறேன். மேலும் திரு. க. லிங்கேஸ்வரன் (தலைவர் நாவலர் சனசமூக நிலையம்) அவர்களே தங்கள் வருகையை எமது பாடசாலை சார்பில் வரவேற்கிறேன்.

சகோதர பாடசாலை ஆசிரியர்களே பெற்றோர்களே அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்களே, பழைய மாணவர்களே எமது ஊர்வாழ் மக்களே உங்கள் அனைவரையும் எமது சபையின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து நன்றியுடன் வரவேற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வரலாற்றுச் சுருக்கம்

ஈஞ்சடிக் குறிச்சியில் சிறுவர்களுக்கான முன்பள்ளி ஒன்று இருக்க வேண்டும் என்று பெரியோர்கள் நீண்டகாலமாக எண்ணி வந்தனர் ஆயினும் அதற்குரிய வலுவான செயற்திட்டம் எதனையும் ஒழுங்கமைக்கவில்லை எல்லோருடைய எண்ணங்களையும் பிரதிபலிக்கும் முறையில் 05-04-2003ல் அதற்குரிய அடித்தளம் இடப்பட்டு இன்று அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதற்குத் துணை நின்று வளர்த்து வருபவர்கள் திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் ஆவார். இவருக்கு ஆரம்பத்திலிருந்து இன்று வரையும் பக்க பலமாக இருந்து வருபவர் திரு. க. ஸ்ரீநந்தகோபன் அவர்கள் ஆவார். அவருடன் 2003 காலப்பகுதியில் பொருளாளராக இருந்த திரு. சி. இராசரத்தினம் அவர்களது ஒத்துழைப்பும் சிறப்பானதாக அமைகிறது.

- **பாடசாலை ஆரம்பம் 05-04-2003**

**05-04-2003ல் அமைக்கப்பட்ட சபை**

| | |
|---|---|
| தலைவர் | - திரு. இ. பேரின்பநாயகம் |
| உப தலைவர் | - திருமதி பத்மாவதி அருமைத்துரை |
| செயலாளர் | - திரு. க. ஸ்ரீநந்தகோபன் |
| உப செயலாளர் | - திருமதி பா. சிவலிங்கம் |
| பொருளாளர் | - திரு. சி. இராசரத்தினம் |
| உறுப்பினர் | - திரு.ச. லிங்கசீலன் |
| | திருமதி அ. நவரட்ணம் |

புதிய கட்டட அமைப்பு

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது நினைவு தினமான 05-12-2003 அன்று பேராசிரியர் S.K. சண்முகநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

- புதிய கட்டடத்திற்கான பொங்கல் விழா 26-04-2004 அன்று நடைபெற்றது. இதற்கு விருந்தினர்களாக திரு. திருமதி. சந்திரராசா அவர்கள் வருகை தந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ புதிய கட்டிடம் 03-07-2004 அன்று திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

◆ இக்கட்டடத்திற்கான நிதியினை அப்போது இந்து கலாச்சார அமைச்சராக இருந்த தியாகராசா மகேஸ்வரன் அவர்களும், எம் ஊர் மக்களும், அவர்களுடன் புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது உறவுகளும் தந்து உதவினர். இவ்விடயத்தில் அவர்கள் அனைவரையும்நினைந்து நன்றி கூறுகின்றேன்.

◆ தண்ணீர்த் தாங்கி 03-07-2005 அன்று திறந்து வைக்கப்பெற்றது. இதற்கான நிதியினை திரு. இ. அருமைத்துரை அவர்கள் தனது சகோதரர் அமரர் இ. பரராஜசிங்கம் அவர்களது குடும்பத்தினரும் தமது அமரத்துவமடைந்த பிள்ளைகளினது ஞாபகார்த்தமாக கட்டித் தந்தார்கள். அவர்களுக்கும் இவ்விடயத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

◆ விளையாட்டு முற்றம் 25-07-2005 அன்று பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. இதற்கான நிதியினை கனடாவில் வசிக்கும் சுதுமலையைச் சேர்ந்த திருமதி கமலா பத்மநாதன் அவர்கள் தந்து உதவினார்கள். அவர்களையும் இவ்விடத்தில் நினைந்துநன்றி கூறுகின்றேன்.

◆ ஆண்டு விழா நூல்வெளியிடப்பட்டது. இம் மலருக்கு உதவிய உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

**இரண்டாவது பொது நிர்வாக சபை 12-02-2007ல் அமைக்கப்பட்டது.**

| | |
|---|---|
| தலைவர் | - திரு. இ. பேரின்பநாயகம் |
| உப தலைவர் | - திரு. சி. சந்திரராசா |
| செயலாளர் | - திரு. க. ஸ்ரீநந்தகோபன் |
| உபசெயலாளர் | - திரு. க. இராசரத்தினம் |
| பொருளாளர் | - திரு. ச. தம்பித்துரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள்

திரு. சி. இராசரத்தினம்
திரு. த. இலங்கநாதன்
திரு. ந. குணரத்தினம்
திரு. ந. பவாநாதன்
திரு. சி. பாலேந்திரா
திரு. க. பாலசுப்பிரமணியம்

- சிறுவர் அரங்கு அமைப்பு பேராயிரவர் அரங்கு எனப் பெயரிடப்பட்டது. இவ் அரங்கு 20-07-2008 அன்று செல்வி ரோகிணி பேராயிரவர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. இதற்கான நிதியினை தனது தந்தை பேராயிரவர் நினைவாக தந்து உதவினார்கள் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.
- சுதுமை நூலின் வெளியீடும் இடம் பெற்றது. இதற்கு உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

மூன்றாவது நிர்வாக சபை 24-12-2008இல் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் - திரு. சி. சந்திரராசா
உப தலைவர் - திரு. இ. பேரின்பநாயகம்
செயலாளர் - திரு. க. ஸ்ரீநந்தகோபன்
உப. செயலாளர் - திரு. தி. சுகுமாரன்
பொருளாளர் - திரு. க. இராசரத்தினம்
உறுப்பினர்கள்

திரு. ந. குணரத்தினம்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. த. இலங்கநாதன்
திரு. ந. பவாநாதன்
திரு. க. தேவராசா
திரு. இ. ஈஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது நிகழ்வு

இவ்வாண்டு (2009) நடைபெற்ற விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக லயன் செ. சதீஸ்குமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். அன்றைய தினம் திரு சு. கனகலிங்கம் அவர்கள் ரூபா 20000.00 பெறுமதியான தளபாடங்களை வழங்கியிருந்தார். அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகின்றேன்.

## இரண்டாவது நிகழ்வு

இரண்டாவது நிகழ்வாக இன்றைய தினம் கலை விழா இடம் பெறுகின்றது. இந்நிகழ்வில் நாம் ஒரு முக்கியமான விடயத்தினை முன் வைக்க எண்ணுகின்றோம். எமது பாடசாலையை ஸ்தாபிக்க வித்திட்ட பெரியார் உயர்திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் என்றால் யாரும் மறப்பதற்கில்லை மறுப்பதற்கும் இல்லை. அவர் எடுத்த அரும்பெரும் முயற்சியினால் இன்று இப்பாடசாலை இப்பிரதேசத்தில் சகல வளங்களும் கொண்ட நற் பாடசாலையாக, முன் மாதிரிப் பாடசாலையாக அமைந்துள்ளது. இக்கருத்தினை சென்ற ஆண்டு விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த முறைசாராக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் திரு. குகநேசன் அவர்களே தமதுரையில் கூறியிருந்தார்கள். அந்த வகையில் எமது பாடசாலையை ஸ்தாபிதம் செய்த ஸ்தாபகர் திரு. இ. பேரின்பநாயகம் அவர்களை நாம் பாராட்டாது இருந்துவிட முடியாது. அவர் தம் பணியை நாம் வாழ்த்தாது விட்டுவிட முடியாது. இப்பாடசாலை சூரியன் சந்திரன் வலம் வரும் காலம்மெல்லாம் இயங்கும். அதே போல் திருவாளர் இ. பேரின்பநாயகம் அவர்களின் பெயரையும் கூறும் என்றால் மிகையாகாது. இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக இருந்தவர் எம் ஈஞ்சடிப் பதியான் அவர் தன்பாதங்களைப் பரிவோடு வணங்கி நன்றி கூறுகின்றேன்.

திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் தமது உடல் உழைப்பினை மட்டுமல்ல நிதி பலவற்றையும் அளித்து வருகின்றார்கள். ஆரம்பத்திலிருந்து இன்றுவரை ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியையும் செலுத்தி வருகின்றார். கட்டிடம் கட்டுவதிலிருந்து இன்றுவரை வருகின்ற ஒவ்வொரு நிதிசார் வேலைத் திட்டங்களுக்கும் தனது பணத்தை முதலிட்டு செய்து வருகின்றார். பின்பு பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற பொழுது பெற்றுக் கொள்கின்றார். சகல விழாக்களுக்கும் பெருமளவு நிதியை தனது சொந்தச் செலவில் செய்து வருகின்றார். இலவசமாக மாணவர்களுக்கு கல்வியைப் போதிக்க வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக கட்டணம் அறவிடாது கற்றல் செயற்பாடுகளுக்கு வித்திட்டார். எவ்வகையிலும் எமது ஊரை, மக்களை வெளியிலிருந்து வருபவர்கள் சிறப்பாக கூறவேண்டும், பார்க்க வேண்டும் என்கின்ற உயர் எண்ணம் உடையவர். அவ்வகையிலே அவர் பணி எமது பாடசாலைக்கும் எமது பிரதேசத்திற்கும் என்றும் உறுதுணையாக நிற்க இறைவனை வேண்டுகின்றேன்.

## மன மகிழ்வு தரும் மாணவச் செல்வங்கள்.

நாவலர் பாலர் பாடசாலைத் தாயின் மடியில் தவழும் எம் மாணவர்களின் தொகை தொடர்ச்சியாக குறிப்பிட்ட மாணவர் தொகை வருகின்றமை எமது ஆசிரியர்களின் சிறந்த செயற்பாடுகளில் பெற்றோர் கொண்டுள்ள உயர்ந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. 2003ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை எமது மாணவர்கள் விபரம் வருமாறு.

2003 - 28
2004 - 46
2005 - 42
2006 - 26
2007 - 35
2008 - 32
2009 - 21

எமது பாடசாலையின் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோரில் பெரும்பாலானோர் நிரந்தரமான தொழிலற்றவர்களாகவும் ஸ்திரமான பொருளாதார வசதிகள் அற்றவர்களாகவும் உள்ளனர். எனினும் தமது பிள்ளைகளின் கல்வித்தரத்தினை உயர்த்த வேண்டும் என்கிற அக்கறையும் ஆர்வமும் காணப்படுவதால் அச்சக்தி எமது ஆசிரியர்களுக்கு உந்து சக்தியாக உள்ளது.

## அர்ப்பணிப்பான ஆசிரியர்கள்

அர்ப்பணிப்பான ஆசிரியர்களின் உழைப்பின் காரணமாக நாம் வருடாவருடம் உயர்பாடசாலைகளுக்கு அவர்களை அனுப்பக் கூடியதாக உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்து கொண்டு செல்கின்றது. தற்போது எமது பாடசாலையில் 02 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் திருமதி. அழகேஸ்வரி நவரட்ணம் அவர்கள் சிறந்த பண்பும் ஆசிரிய சேவையில் நீண்ட கால அனுபவமும், நிர்வாகத் திறமையும் உடையவர். அவரது ஆற்றலால் மாணவர்கள் உயர் பாடசாலைகளில் கற்க ஏதுவாக உள்ளது. மற்றையவர் திருமதி. ச. அனுசியா அவர்கள் இவ் ஆண்டு இணைந்து தற்காலிகமாக செயற்பட்டு ஆசிரியருக்கு உதவி புரிந்து வருகிறார். இவர்கள் இருவரும் போற்றுதற்குரியவர்கள்.

இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களில் செல்வி விபாஜினி சண்முகராசா அவர்கள் கடந்த 2 வருட காலம் எமது பாடசாலையில் பணிபுரிந்து வேறு தொழிலுக்கு சென்றுள்ளார். அவரையும் இவ்விடத்தில் நினைத்து நன்றிபாராட்டுகின்றேன். இப்பாடசாலையில் செல்வி. க. கந்தசாமி, திருமதி. சி. ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரது பணிகளையும் நன்றியுடன் பாராட்டிப் போற்றுகின்றேன்.

## இணைபாடவிதான செயற்பாடுகள்.

கல்விசார் செயற்பாடுகளில் மட்டுமல்லாது ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலை சிறப்பாக வளர்ச்சியைப் பெற்றுவருகின்றது. குடும்பமட்டம், பிரதேச மட்டங்களிலான எம் இளம் சிறார்களின் வெற்றிகள் விரிந்து செல்கின்றது. தமிழ் மொழிசார் போட்டிகள், கலைசார் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என சகல போட்டிகளிலும் திறமையாகப் பங்குபற்றி பரிசில்களும் பெற்று வருகிறார்கள் இதற்கு உறுதுணையாக இருந்த எமது பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையம் பாராட்டுகின்றேன்.

### போசாக்கு உணவுப் பொருட்கள் தந்துதவியவர்கள்

- திரு. ம. மயூரன் அயலூரில் உள்ளவர் போசாக்கும், குளிர்பான வகைகளும் வழங்கியுள்ளார்.
- J.R.S நிறுவனம் ஒரு வருடத்திற்கான போசாக்கு உணவு வழங்கியது.
- போறூட் நிறுவனம் 2008-5ம் மாதத்திலிருந்து 2009-08ம் மாதம் வரை உணவு வழங்கியுள்ளது

அவர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பொருட்கள் வழங்கிய நிறுவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- JRS நிறுவனம் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்ததோடு கற்பித்தல் உபகரணமும், பொருட்களும் வழங்கியது. (மருதனார்மடக் கோட்டத்தில் வைத்து)
- போரூட்டினால் 2008-08-29 இல் சாப்பிடுவதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- PHIயால் வாளி, விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- 27-07-2009 இல் முதலுதவிப் பெட்டி தரப்பட்டது, போரூட்டினால் 08-03-2008 இல் துவாயும் கிடைத்தது.
- 20-09-2009 இல் அரசாங்கத்தால் புத்தகமும், பயிற்சிப் புத்தகமும் தரப்பட்டது.
- போரூட்டினால் போசாக்கு வழங்குவதற்கு பாத்திரங்கள் வழங்கப்பட்டது.
- போசாக்கு வழங்குவதால் போரூட் ஆசிரியர்களுக்கு மாதம் ரூபா 1000.00 வழங்கியது. (மேற்பார்வை செய்வதற்கு)

இவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

## அவசியமான தேவைகள்

மிக அத்தியாவசியமான தேவைகள் பல பாடசாலையில் அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- நவீன கற்பித்தல் முறைக்கு தொலைக்காட்சி, வானொலி, கணனி அவசியமாகத் தேவைப்படுகின்றது.
- கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்.
- மலசல கூடம்.

## மேலும் எமது பாடசாலையின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் முக்கிய நடவடிக்கைகள்

- நிரந்தர வைப்புப் பணத்தை அதிகரித்தல்
- எமது பிரதேசத்திலிருந்து கல்விப் பொதுத் தராத உயர் தரத்திற் சித்தியெய்திய மாணவர்களை முன்பள்ளி டிப்ளோமா பயிற்சிக்கு அனுப்பி அவர்கள் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை மேலும் தரம் உயர்த்துதல். அதன் மூலம் மாணவர் தொகையை அதிகரித்தல்.

இவ்வாறான தேவைகள் மற்றும் எமது செயற்திட்டங்களில் நாம் முழு அளவில் அரச செலவையும் அரசசார்பற்ற நிறுவனங்களையும் எதிர்பார்க்க முடியாது எமது பாடசாலை சார்ந்த கிராம மக்கள் இப்பாடசாலையின் அபிவிருத்திக்காக, பிள்ளைகளின் கல்விக்காக உங்கள் கிராமத்தின் முன்னேற்றத்துக்காக இத்தேவைகளை நிறைவு செய்ய முன்வந்தால் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். தங்களது சகல ஒத்துழைப்புக்களையும் வரவேற்போம்.

அடுத்த ஆண்டு எமது பாடசாலைக்கு புதிய மாணவர்களையும், ஆசிரியர்களையும் இணைக்க இருக்கின்றோம். க. பொ. த. உயர்தர சித்தியெய்திய வர்கள் இருவரை நாம் அடுத்த ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் முன்பள்ளி டிப்ளோமா பயிற்சிக்கு அனுப்பவுள்ளோம். எம் ஊர் பிள்ளைகளான செல்வி சிவதாரணி சிவபுத்திரன் அவர்களும் செல்வி ரதிநிலா ரவீந்திரகுமார் அவர்களையும் புதிய ஆசிரியர்களாக 01-01-2010ம் ஆண்டு முதல் எமது பாடசாலையில் பணிபுரிய உள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்கின்றேன். ஆகவே எம் பிரதேச மக்களிற்கு உரிய கல்வியை வழங்க நாம் தயாராக உள்ளோம். உங்களது சின்னஞ்சிறார்களை எமது பாடசாலையில் இணைத்து பேரறிவுள்ள மாணவர்களாகத் திகழ வழி சமையுங்கள்.

## இதர செயற்திட்டங்கள்

- சிறந்த முறையில் விழாக்களை நடாத்துதல்.
- ஊர்சார் தகவல்களுடன் நூல்களை வெளியிடுதல்.
- ஊரில் சமூக மற்றும் சேவைகளை ஆற்றிய பெரியோர்களைக் கௌரவித்தல்.
- இசை வகுப்புக்களை நடாத்துதல்.
- சமூகத்துக்கு தேவையான கருத்தரங்குகளை நடாத்துதல்.
- எதிர்காலத்தில் கலை, இலக்கிய, கல்விசார் காலாண்டிதழ்களை வெளியிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய செயற்திட்டங்களில் முதலில் கூறப்பட்ட மூன்று செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனையவை எதிர்காலத்தில் ஆண்டவனது கருணையாலும், மக்களின் ஆதரவினாலும் நடைமுறைப்படுத்தப்படும். என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நிறைவாக

எமது பாடசாலையின் உயர்வில் உவகை காணும் பல்வேறு பகுதியாளரிடையே பிரதேச சபை முக்கிய இடம் பெறுகிறது. எமது பிரதேச சபைச் செயலாளர் திருமதி. பு. சிவலிங்கம் அவர்களும் வலிகாமம் வலய முறைசாரக் கல்விப்பிரிவு உதவிப் பணிப்பாளர் திரு. குகநேசன் அவர்களும் போறூட் நிறுவனத்தின் இணைப்பாளர் அவர்களும் தமது ஆற்றலுக்கு ஏற்றவகையில் மிகுந்த கரிசனையுடன் பாடசாலைக்கு உயர்ந்த உதவிகளை நல்கிவருகின்றார்கள். இவ்வாறு பலவழிகலும் சேவை புரியும் அனைவரையும் போற்றுகின்றேன். இவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றிகள்.

இங்கு கூறப்பட்ட விடயங்கள் யாவும் எமது ஆண்டு விழா மலரில் நிதி தந்துதவிய சகலரது பெயர்களும் பொறிக்கப்பட்டு ஏற்கனவே எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இங்கு குறிப்பிடப்படுவது அதன் சுருக்கம் மட்டுமே என்பதை யாவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாடசாலையின் வளர்ச்சியில் பலவழிகலும் பண உதவி, பொருளுதவி செய்த இந்து கலாச்சார அமைச்சு, உள்ளூர் மக்கள், புலம்பெயர்ந்த எமது உறவினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களும், நன்றிகளும்.

எம்முடன் பாடசாலையை இயக்குகின்ற முன்னாள் தலைவரும் தற்போதைய உப தலைவரும் அகிய திரு. இ. பேரின்பநாயகம், செயலாளர், திரு. க. ஸ்ரீநந்தகோபன், உப செயலாளர் திரு. தி. சுகுமாரன், பொருளாளர் திரு. க. இராசரத்தினம், உறுப்பினர்கள், திரு. ந. குணரத்தினம், திரு. க. பாலசுப்பிரமணியம், திரு. க. தேவராசா, திரு. இ. ஈஸ்வரன், திரு. த. இலங்காநாதன், திரு. ந. பவானந்தன் அனைவரையும் நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுகின்றேன். மேலும் ஆசிரியர் திருமதி. அழகேஸ்வரி நவரட்ணம், திருமதி அனுசியா சத்தியரூபன் அவர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

இன்றைய விழாவிற்கு வருகை தந்த பிரதம விருந்தினர் திருமதி. பு. சிவலிங்கம் அம்மா அவர்களையும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட திருமதி. பி. அம்பிகைபாலன் அவர்களுக்கும், திரு. இ. லோகநாதன் அவர்களுக்கும், திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்ட திரு.கா. திருநாவுக்கரசு அவர்களுக்கும், திரு. க. லிங்கேஸ்வரன் அவர்களுக்கும் அயற்பாடசாலை ஆசிரியர்கள் எமது ஊர்மக்கள், சுதுமலை பாலர்பாடசாலைத் தாயின் மனம் மகிழ்வித்தமைக்காக என் அன்பான நன்றியினைத் தெரிவித்து இதய நிறைவுடன் விடைபெறுகின்றேன்.

- நன்றி -

இங்ஙனம்

சி. சந்திராாசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ThiruSelvi manipay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org